# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–145/2022

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சேதுராமு | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

03.03.2026 – 12.20 PM

<u>முதல் விசாரணை:–</u>

1. நான் கொத்தங்குளம் கிராமத்தில் குடியிருந்து ஆசிரியர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 ஐ எனக்கு தெரியும்.

2. சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மதிய நேரத்தில் சாயல்குடி ஹவுசிங் போர்டு காலனியில் உள்ள மாரிய என்பவரது வீட்டின் முன்பு சண்டை நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்க சென்றபோது என்னை யாரோ கீழே தள்ளிவிட்டார்கள். என்னை தள்ளிவிட்டதில் எனது தலையிலும், இடது கை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. என்னை தள்ளிவிட்டவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார் வாக்குமூலம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி:–</u>

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

கடந்த 21.07.2020ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் சாயல்குடி –

செவல்பட்டி ரோட்டில் இருக்கும் எனது மாமியார் விஜயராணி வீட்டிற்கு சென்றுவிட்டு ஹவுசிங் போர்டு காலனியில் உள்ள மாரி என்பவரிடம் நான் கொடுத்த பணத்தை திரும்ப வாங்குவதற்காக சென்ற போது மாரியின் கணவரான ஆஜர் எதிரி, அவரது மகன் வீரமுத்து என்னை பார்த்து அசிங்கமாக பேசி அருவாளால் மற்றும்இரும்பு கம்பியால் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், பிறகு எனது நண்பர் இருசக்கர வாகனத்தில் சென்று கடலாடிஅரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றேன் என்றும், பின்னர் மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றும், அங்கு வந்த சாயல்குடி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரி பக்கத்துஊரைச் சேர்ந்தவர் என்பதால் எதிரியுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.03 16:40:31 +0530